பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 07 | செவ்வாய்க்கிழமை | 23.09.2025 | அதிர்வு 053

## தவறான வழியில் அநுர அரசாங்கம்

### தினேஷ் குற்றச்சாட்டு



“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு தற்போது 07




# மன்னார் காற்றாலைகளை அமைக்கும் பணி நடக்கும்

## முடிவு எடுத்தார் ஜனாதிபதி இன்று அறிவித்தல் கிட்டும்

மன்னார் நகரப் பகுதியில் நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட மின் உற்பத்திக்கான 14 காற்றாலைகளையும் திட்டமிட்டபடி அமைக்கும் பணிகளைத் தடை இன்றி தொடரும்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவிட்டிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது. 07

# அமெரிக்கா பயணமானார் ஜனாதிபதி

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று இரவு அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

ஜனாதிபதி நாளை புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ளார்.

அத்துடன், இந்த விஜயத்தின் போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு ஜனாதிபதி 06






செத்தும் கொடுத்தான் சீதாக்காதி என்பார்கள். அந்த மாதிரி தமிழரசுக் கட்சியின் காங்கேசன் துறைத் தொகுதிக் கிளைக்கு அதன் முன்னாள் கிளைத் தலைவர் மாவை சேனாதிராஜா அமரராவதற்கு முன்னர் செய்துவிட்ட போன குசும்பு வேலைகள் இன்னும் குழப்பங்களைத் தொடர வழி செய்த வண்ணம் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைக்கு செயலாளராக இருந்து வருபவர் வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவரான சுகிர்தன்தான்.

காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையிலிருந்து தமது மகனை முன்னிறுத்தி, மேலே கொண்டு வருவதற்காக, அதற்கு இடைஞ்சலாக இருந்த சுகிர்தனை கிளைச் செயற்பாட்டில் இருந்து வெட்டுவதற்கு தீர்மானித்த மாவை சேனாதிராஜா, கிளையின் செயலாளர் சுகிர்தனுக்குத் தெரியாமல் – தெரிவிக்காமல் – செயலாளரில்லாமலேயே – ஒரு கிளைக் கூட்டத்தைத் தம் வீட்டில் – தம்பாட்டில் – கூட்டி, புதிய ஒருவரைக் கிளையின் செயலாளர் என்று அறிவித்தார். 06



# தங்காலையில் வீடொன்றில் மூன்று ஆண்களின் சடலங்கள்

## 3 லொறிகளில் 624 கிலோ போதைப்பொருள்களும் 6 துப்பாக்கிகளும் மீட்பு

அம்பாந்தோட்டை மாவட்டம், தங்காலை – சீனிமோதர பகுதியில் புனரமைக்கப்பட்டு வரும் பழைய வீடொன்றில் இருந்து இன்று திங்கட்கிழமை மூன்று ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

அதேவேளை, சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டுக்கு அருகில் இருந்த மூன்று லொறிகளில் இருந்து 625 கிலோகிராம் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

245 கிலோ கிராம் ஐஸ் மற்றும் 380 கிலோ கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் 6 நவீன துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 5 பிஸ்டல் ரக துப்பாக்கிகள் மற்றும் ஒரு ரி – 56 ரக துப்பாக்கியே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.













## யாழ். பலாலி விமான நிலையத்தில்

# உடல் பாகத்தினுள் மறைத்து தங்கம் கடத்திய பெண் கைது!



யாழ். பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக, உடல் பாகத்தினுள் மறைத்து தங்கத்தைக் கடத்திய பெண் காங்கேசன்துறை சுங்கத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை இந்தியாவில் இருந்து, யாழ். பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக, மேற்படி பெண் 300 கிராமுக்கு அதிகமான நிறையுடைய தங்கத்தைத் தனது உடல் பாகத்தினுள் மறைத்துக் கொண்டு வந்தமை, பலாலி விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளின் சோதனையில் தெரியவந்தது.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, நேற்றுமுன்தினம் மாலை சத்திர சிகிச்சையின் பின் அவரது உடலில் இருந்து தங்கம் வெளியே எடுக்கப்பட்டது எனத் தெரிய வருகின்றது.

கொழும்பைச் சேர்ந்த 41 வயதுடைய இந்தப் பெண்ணின் மீது, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று காங்கேசன்துறை சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

# 6 அமைச்சரவை அமைச்சர்கள் தொடர்பில் இறைவரி திணைக்களத்திடம் விசாரிப்போம்

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு




தற்போதைய அரசாங்கத்தின் ஆறு அமைச்சரவை அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இதனை தெரிவித்த அவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்த ஆறு அமைச்சரவை அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் விரைவில் தகவல் கோரவுள்ளதாக குறிப்பிட்டார்.

அதேநேரம், அரசாங்கத்தில் உள்ள ஏனைய மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்கள் குறித்த தகவல்களும் கோப்புகளும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆறு அமைச்சரவை அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுந்துள்ளதால், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இது குறித்து அவசரமாக விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இந்த அமைச்சர்கள் எதுவித தொழிலை புரியாமலும், வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும், முழு நேர அரசியலில் ஈடுபட்ட நிலையில், இவ்வளவு செல்வத்தை எவ்வாறு பெற்றனர் என்பது கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறுகிறார்.

எனவே, உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இந்தத் தகவலைப் பெற்ற பின்னர், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சட்ட ஆலோசனை பெறப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார்.



# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அதிகளவான ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தகவல்

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தரைப்பகுதியில் அதிக தொகையான ஐஸ் போதைப்பொருள் தங்காலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதலின் போது, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போதைப்பொருள் கடத்தல்காரர்களும், விற்பனையாளர்களும், அதன் பின்னணியிலிருந்து செயற்படுவோருக்கு மகிழ்ச்சியடைய முடியாததொரு சூழலை ஏற்படுத்தியுள்ளோம்.

அவர்களுக்கு எதிராக எடுக்கக் கூடிய சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம்.

முன்னதாக மாத்தறையில் கைப்பற்றப்பட்ட 394 கிலோகிராம் போதைப்பொருளே இன்றுவரை தரைவழி சோதனையில் சிக்கிய அதிக தொகையான போதைப்பொருளாக இருந்தது.

அதன்பின்னர் முதல் முறையாக தரைவழி சோதனையில் இன்று 625 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில், எந்தவொரு போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கும் அடைக்கலம் வழங்க எந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்படாது என உறுதியளிக்கின்றோம்.” என்றார்.

இதேவேளை, வெற்றிகரமான போதைப்பொருள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும், போதைப்பொருள்கள் தொடர்பில் பயனுள்ள தகவல்களை வழங்கும் பொது மக்களுக்கு பொலிஸாரால் வெகுமதிகளும் வழங்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவை கார்ல்டன் இல்லத்தில் சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே



ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை சந்தித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்துக்குச் சென்ற ஹேஷா விதானகே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நலம் விசாரித்துவிட்டு சுமார் 15 நிமிடங்கள் அவருடன் கலந்துரையாடியுள்ளார்.

ஹேஷா விதானகே சென்றபோது இன்முகத்துடன் அவரை வரவேற்ற, மஹிந்த ராஜபக்ஷ, “நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? வீட்டிற்குச் செல்கிறீர்களா?” என்று கேட்டார்.

“ஐயா, நான் உங்களைப் பார்க்க வந்தேன். திலீப் அண்ணனும் வந்தார். உங்களைப் பார்க்கவே வந்தேன்,” என்று ஹேஷா விதானகே கூறினார்.

“நீங்கள் நல்ல அரசியல் பணிகளைச் செய்கிறீர்கள். நீங்கள் இளமையாக இருக்கும்போது அப்படித்தான் பணியாற்ற வேண்டும். அதே வழியில் அரசியல் பணிகளையும் பொது சேவையையும் தொடர்ந்து செய்யுங்கள். அது நல்லது,” என்று முன்னாள் ஜனாதபதி மஹிந்த ராஜபக்ஷ அவரிடம் கூறியுள்ளார்.




# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் நேற்று மஹிந்த குடும்பத்துக்கு எதிராக முறைப்பாடு

முறையற்ற சொத்து சேகரிப்பு மற்றும் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பு, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவில் முறைப்பாடு அளித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார நேற்று திங்கட்கிழமை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக் குழுவில் முன்னிலையாகி இந்த முறைப்பாட்டை அளித்தார்.

அதன் பின்னர் அவர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசியல்வாதிகளின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய ஆணைக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. குறித்த வெளிப்படுத்தல்கள் தொடர்பின் உள்ளடங்கள் குறித்து அரசின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எதிராகவும், எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சமர்ப்பித்துள்ள சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் சந்தேகத்துக்குரியதாகக் காணப்படுகின்றன. தான் சட்டத்தரணியாகப் பணிபுரிந்து சொத்துக்களைச் சேகரித்துள்ளதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களைக் காட்டிலும் அவரிடம் அதிகளவான சொத்துக்கள் இருக்கும் என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

அவரது உறவினர்கள் அல்லது நண்பர்களின் பெயர்களிலும் அவரது சொத்துக்கள் இருக்கலாம். ஆகவே, இந்த விடயம் குறித்து ஆணைக்குழு முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முறைப்பாடு அளித்துள்ளோம்.


இரண்டாவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு எதிராக முறைப்பாடு அளித்துள்ளோம். இவர் வசித்த கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அரச உத்தியோக பூர்வ இல்லத்தைப் புனரமைப்பதற்கு 51 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்புப் பணிகள் முறையான விலை மனு கோரலுடன் மேற்கொள்ளப்பட்டதா அல்லது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளாமல் 51 கோடி ரூபா பதுக்கப்பட்டதா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகின்றது. ஆகவே, இந்த முறைப்பாடு குறித்தும் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியான ஷிரந்தி ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் இல. 260 டொரிங்டன் மாவத்தை, கொழும்பு 07 இல் 360 இலட்சம் ரூபாவுக்கு வீடொன்றைக் கொள்வனவு செய்துள்ளார். இந்த வீட்டைக் கொள்வனவு செய்வதற்காக அவருக்கு 360 இலட்சம் ரூபா எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பதில் சந்தேகம் உள்ளது.

ராஜபக்ஷக்கள் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தி தங்களை வளப்படுத்தி நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளார்கள். இவர்களின் சொத்து குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு, உரிய சட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் குடும்பம் முறையற்ற சொத்து சேகரித்த விவகாரத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதைப் போன்று ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்." – என்றார்.

# நள்ளிரவில் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு






முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் முதியவர் ஒருவர் தனித்திருந்த வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று நள்ளிரவில் பெட்ரோல் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டின் சுற்று மதில் மீது ஏறிப் பாய்ந்து வீட்டுன் முகப்புப் பகுதியல் பெட்ரோல் ஊற்றி தீ மூட்டப்பட்டுள்ளது.

இதன் போது வீட்டின் முகப்பு கதவு, மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

முகத்தை துணியால் மூடி கட்டியவாறு தலைக்கவசம், மழைக் கவசம் என்பனவற்றை அணிந்து மர்ம நபர்களால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவில் சம்பவம் பதிவாகிய நேரம் சுதாகரித்துக் கொண்ட முதியவர் அயலவர்களை அழைத்த போது தாக்குதல் தாரிகள் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ நேரம் பொலிஸாருக்கு அழைப்பெடுத்து தெரிவத்த போதும், 4 மணிக்கே பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பல் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தாம் தலைவராகத் தொடர, கிளையின் செயலாளராக இராஜேந்திரம் என்பவரும், உப தலைவராக இளங்கோவனும் (தந்தை செல்வாவின் பேரனும், சந்திரகாசன் மகனும்) மாவை சேனாதிராஜாவினால் அறிவிக்கப்பட்டனர்.

ஆனால் முறையாகக் கிளைச் செயலாளரின் அறிவித்தல் இன்றி கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தையோ, அந்தத் தெரிவையோ ஏற்றுக் கொள்ள முடியாது என்று தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடம் பின்னர் அறிவித்து விட்டது.

கட்சியைப் பொறுத்தவரை சுகிர்தன் தான் கட்சியின் காங்கேசன்துறைக் கிளையின் செயலாளர். ஆயினும் அவரும் கட்சியும் தொகுதி கிளைக்குள் மாவை சேனாதிராஜா முன்னுரிமை கொடுத்தவர்களை புறமொதுக்காமல் நடத்தினர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இளங்கோவனுக்கு யாழ் மாவட்டத்தில் போட்டியிட இடமளிக்கப்பட்டது. கடந்த உள்ளூராட்சி தேர்தலிலும் மாவை சேனாதிராஜாவினால் கிளையின் போட்டிச் செயலாளர் எனக் கொண்டுவரப்பட்ட இராஜேந்திரத்துக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனாக் அவர் (இராஜேந்திரம்) வென்று சபைக்கு உறுப்பினராக வந்து செய்த முதல் வேலை வலி வடக்கு பிரதேச சபை தலைவர் தெரிவின் போது – கட்சியின் முடிவுக்கு மாறாக, சுகிர்தனுக்கு வாக்களிக்காமல் விட்டதுதான்.

அதை அடுத்து, இராஜேந்திரத்தைக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தி கட்சிச் செயலாளர் அறிவித்தல் விடுக்க, அதற்கு எதிராக இராஜேந்திரம் நீதிமன்றுக்குச் சென்றார். ஆனால் நீதிமன்றம் அவரை இடை நிறுத்திய உத்தரவுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு வழங்க மறுத்துவிட்டது.

இந்தப் பின்புலத்தில் இராஜேந்திரனுடன் சேர்ந்து கொண்டு இப்போது இளங்கோ கட்சிக்கு குசும்பு வேலைகள் செய்து கொண்டிருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகின்றன.

இளங்கோ கட்சியின் மத்திய குழுவில் இல்லை. ஆனால் 'தமிழரசுக் கட்சி மத்திய குழு' என்ற பெயரில் ஒரு whatsapp குழுவை அண்மையில் அவர் ஆரம்பித்து பலருக்கும் செய்தி அனுப்ப தொடங்க, அது தவறு, அப்படிச் செய்ய வேண்டாம் என்று கட்சியின் செயலாளர் சுமந்திரன் அவருக்கு அறிவித்தார். அதனை அடுத்து அந்த whatsapp குழுவில் சேர்க்கப்பட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலரும் தாமாகவே அதிலிருந்து வெளியேறினர்.

இப்போது 'காங்கேசன்துறை தொகுதிக் கிளையும் மத்திய குழுவும் கலந்துரையாடல்' என்ற பெயரில் அந்த whatsapp குழுவை பெயர் மாற்றி இயக்க முயற்சிக்கிறார் இளங்கோ என்று தெரிகிறது.

தந்தை செல்வாவுக்கு பின்னர் அவரது மகன் சந்திரகாசனும் கூட தமிழரசு கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருந்து கொண்டு அமிர்தலிங்கத்திற்கும் ஏனையோருக்கும் இப்படித்தான் குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தார் என்பது முன்னைய அரசியல் அறிந்த பலருக்கும் தெரியும்.

தந்தைக்கு தப்பாமல் பிறந்த மகன் இளங்கோவன் இப்போது அந்த வேலையைத் தான் செய்து கொண்டிருக்கிறார் போலும்....!

\+ \+ \+

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களுக்குப் பொறுப்பான செயலாளர் அந்தோணி பர்னாட் கடந்த மூன்று நாள்களாக யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து பலரையும் சந்தித்து வருகிறார்.

நேற்று மாலை இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய மார்ட்டின் வீதி தலைமையகத்தில் அவர் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தையும், செயலாளர் சுமந்திரனையும் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் விரிவாகப் பேசினார்.

மிக முக்கிய விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடினர் என்று தெரிகின்றது. தமிழர் தரப்பின் கருத்துக்களை அமெரிக்கப் பிரதிநிதி உன்னிப்பாகச் செவிமடுத்தார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கும் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்ற வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர் பங்குபற்றவில்லை. கட்சியின் செயலாளர் சுமந்திரன் அழைப்பை அனுப்பியமையால் இந்த கூட்டத்தில் அவர் பங்கு பற்றவில்லையோ, என்னவோ தெரியவில்லை...!

\+ \+ \+

மன்னார் காற்றாலை சர்ச்சை தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஒரு முடிவு எடுத்துவிட்டார். அந்தக் காற்றாலைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் தரப்புகளுக்கு மசிந்து கொடுப்பதில்லை என்ற முடிவை அவர் எடுத்து விட்டார் எனத் தெரிகிறது.

இந்த விடயத்தில் போராட்டத்தைக் கைவிடாமல் தொடர மக்களை வழிநடத்திய மன்னார் ஆயரும், ஆயர் இல்லத் தரப்பினரும் விடயத்தை இனி எவ்வாறு கையாளப் போகின்றனர் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

போராட்டத்தை தொடரும்படி மக்களைப் பணித்து விட்டு வெளிநாட்டுக்குச் சென்றிருந்த மன்னார் ஆயர் நாளை மறுதினம்தான் நாடு திரும்புகிறார். அவர் வந்த பின்னர்தான் அடுத்த கட்ட முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

எனினும், காற்றாலைகள் அமைக்கப்படுவதை தடுக்கும் விதத்தில் போராட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டால், அவற்றை சட்டரீதியாகப் பொலிஸ் தரப்பும் மூலம் கையாள இனிமேல் அரசு பின்னிற்காது என்றே தெரிகிறது.

எதிர்ப்பு நடவடிக்கையை சட்ட மீறலாக முன்னெடுத்துத் தடுப்பதற்கு போராட்ட அமைப்புகள் தயாரா என்பது தெரியவில்லை.

இந்த விடயத்தில் தென்னிலங்கை அரசியல் தரப்புகள் நேரடியாக வந்து காற்றாலை எதிர்ப்பு போராட்டங்களில் தங்களை அடையாளப்படுத்தியமை அரசு தரப்பில் பெரும் அதிருப்தியையும் சினத்தையும் ஏற்படுத்தி இருப்பதாக உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அத்தோடு இந்தப் போராட்டம் பொதுமக்களினுடையது என்பதைத் தாண்டி, ஒரு மதத் தரப்பு நடத்துகின்ற போராட்டமாக வெளிப்படையாகவே அடையாளப்படுத்தப்பட்டதும் அரசு தலைமை பீடத்திற்கு பெரும் அதிருப்தியைத் தந்ததாகக் கூறப்படுகின்றது.

போராட்டத் தரப்பில் காற்றாலைகள் அமைக்கப்படுவதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட காரணங்களை விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டை அரசுத் தலைமை கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

இந்த 14 காற்றாலைகளில் நான்கு காற்றாலைகள் அமைக்கும் பணி பெருமளவு பூர்த்தியாகி இருக்கின்ற காரணத்தினால் அவற்றை அனுமதித்து, மற்றப் பத்தையும் மன்னார் தீவுப் பகுதிக்கு வெளியே கொண்டு சென்று அமைக்கக் கோரும் சமரசத் திட்டம் ஒன்று தென்னிலங்கையில் இருந்து அரசுடன் தொடர்புடைய முக்கிய தரப்பினால் முன்மொழியப்பட்ட போது அதனை ஏற்கப் போராட்டத் தரப்பு அடியோடு மறுத்துவிட்டது என்றும், முழுமையாக 14 காற்றாலைகளும்மன்னார்த் தீவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டேயாக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றமையால், அந்த சமரசத் திட்டமும் அடிபட்டு போய்விட்டது என்றும் சில வட்டாரங்கள் கூறுகின்றன.

போராட்டம் நடத்த வேண்டும். ஆனால் எந்தச் சமயத்தில் அதை நிறுத்தி, அதனை மடை மாற்றுவது என்பதை போராட்டத்தை நடத்துபவர்கள் சரியாகக் கணித்து முன்னெடுக்க வேண்டும். அதில்தான் போராட்டத்தின் வெற்றி தங்கி இருக்கின்றது. பலத்த – நேரடியான – பின்னடைவு அனுபவத்தின் பின்னரும் கூட தமிழர் தரப்பு எப்போது போராட்டத்தை நிறுத்துவது என்பதை தீர்மானிப்பதில் தவறிழைத்துக் கொண்டேதான் இருக்கின்றது.

'லக்கி பாஸ்கர்' என்ற அண்மையில் வெளியான ஒரு வெற்றிப் படத்தில் கதாநாயகனுக்கு அவனின் தந்தையார் கூறும் ஆலோசனை வசனம் ஒன்று உண்டு.

"நீ சூதாட்டத்தில் எவ்வளவு நன்றாக விளையாடினாய் என்பது முக்கியமல்ல, எப்போது அதை நிறுத்துகிறீர்கள் என்பதுதான் முக்கியம்." – என்பதுதான் அந்த வசனம்.

சூதாட்டத்தில் வெற்றி வருகின்றது என்பதற்காக தொடர்ந்து அவாவில் சூதாடிக் கொண்டிருந்தால் அது வரையில் அடைந்தவற்றையும் இழக்க வேண்டி நேர்ந்து விடும். தருணம் பார்த்து நிறுத்தவும் வேண்டும்.

ஆயுதப் போராட்டத்திலும் அந்த தீர்மானத்தை எடுப்பதில் நாம் தவறிழைத்தோம். காற்றாலை விடயத்திலும் அதே தவறுதானோ தெரியவில்லை.... பார்ப்போம்...!

---

## அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திட்டமிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

# ஐ.நா. பொதுச் சபை அமர்வில் பாலஸ்தீனத்துக்கான இலங்கையின் ஆதரவை உறுதிப்படுத்தவுள்ள அநுர



ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் நாளை புதன் கிழமை உரையாற்றவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பாலஸ்தீனத்துக்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது கூட்டத் தொடரில் பாலஸ்தீன விவகாரம் முக்கிய பேசுபொருளாக மாறவுள்ளது.

பிரான்ஸ், கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தமது தீர்மானத்தை குறித்த தொடரில் அறிவிக்கவுள்ளன.

இந்நிலையிலேயே பாலஸ்தீன விடுதலைக்குரிய ஆதரவை இலங்கை ஜனாதிபதியும் வெளிப்படுத்துவார் எனத் தெரிய வருகின்றது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் நேற்று இரவு அமெரிக்கா நோக்கி பயணமாகியுள்ளனர்.

இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்குப் பாலஸ்தீன ஜனாதிபதிக்கு அமெரிக்காவால் விசா மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் உரையாற்றுவதற்கு அனுமதிக்கும் பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி செப். 27 ஜப்பானுக்கு விஜயம்



ஜப்பான் அரசால் விடுக்கப்பட்ட அழைப்புக்கமைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

வெளிவிவகாரத்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இந்த விஜயத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதிக்கும், ஜப்பான் பிரதமருக்கும் இடையில் இரு தரப்பு பரஸ்பர பேச்சுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து டோக்கியோவின் முன்னணி ஜப்பான் செயற்றிட்டம் மற்றும் முதலீட்டாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெறும் வர்த்தக மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

## மன்னார் காற்றாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது தொடர்பில் அரசினதும் ஜனாதிபதியினதும் தீர்மானம் அடங்கிய அறிவுறுத்தல் பெரும்பாலும் இன்று மன்னார் செயலகத்துக்குக் கிடைக்கும் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தக் காற்றாலைகளை அமைக்கும் பணிக்கு எதிராக மன்னாரில் பொது மக்கள் மட்டத்தில் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதியே நேரடியாகப் பேச்சு நடத்தி விடயம் குறித்து முடிவெடுப்பதற்கு ஒரு மாத கால அவகாசமும் அவரினால் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் காற்றாலை அமைப்புக்கு எதிராகத் தொடர்ந்து நேற்று 51ஆவது நாளாகப் பொது அமைப்புகள் தமது எதிர்ப்பைக் காட்டிப் போராடி வந்தன.

இந்தநிலையில் திட்டமிட்டபடி 14 காற்றாலைகளையும் அமைக்கும் பணியை முன்னெடுக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

நியூயோக்கில் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் உரையாற்றுவதற்காக நாட்டை விட்டு புறப்படும் முன்னர் ஜனாதிபதி இந்த உத்தரவை வழங்கியிருந்தார் எனத் தெரியவருகின்றது.

சௌத்பார், தாழ்வுப்பாடு பகுதிகளில் நான்கு காற்றாலைகளும், பொன்னையன் குடியிருப்பு முதல் பேசாலை வரை உள்ள பகுதியில் 10 காற்றாலைகளும் அமைக்கப்பட இருக்கின்றன.

இவற்றில் நான்கு காற்றாலைகள் சீலெக்ஸ் நிறுவனத்தினாலும், ஏனைய பத்து காற்றாலைகளும் ஹெலீஸ் நிறுவனத்தினாலும் அமைக்கப்பட இருக்கின்றன.

இலங்கையில் அமைக்கப்படும் இத்தகைய ரக காற்றாலைகளில் அதிக கூடிய மின்னை உற்பத்தி செய்யக்கூடிய, அதிநவீன காற்றாலைகள் இந்தப் பதினான்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இவை ஒவ்வொன்றும் ஐந்து மெகா வாட்ஸ் மின் உற்பத்தி செய்யக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் காற்றாலைகள் திட்டமிட்டபடி அமைக்கப்படும் என்ற முடிவை அரசு எடுத்துள்ளதால், அதனை ஆட்சேபித்து வரும் பொதுத் தரப்புகள் இது விடயத்தில் அடுத்த கட்டமாக என்ன முடிவை எடுப்பார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## தவறான வழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவறான வழியில் பயணித்துக்கொண்டிருக்கின்றது."

– இவ்வாறு முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் கவலையில் உள்ளனர். வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கின்றது. அரசின் பயணம் தவறு என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

எனது அரசியல் பயணம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இறுதி மூச்சு இருக்கும் வரை அரசியல்வாதிகளால், அரசியலை விட்டுச் செல்ல முடியாது. அவ்வாறு செல்வோம் எனக் கூறுவது பொய்.

எதிரணிகளின் வேலைத்திட்டம் என்ன வென்பது பற்றி அவதானித்துக் கொண்டிருக்கின்றேன்." – என்றார்.

# செல்லுபடியற்ற விசாவுடன் இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் குறித்து கலந்துரையாடல்



இலங்கையுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நிறுவப்பட்ட நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் இரண்டாவது கூட்டத்தில் செல்லுபடியாகும் விசாக்கள் இல்லாமல் இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களின் பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விவகாரம் இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் வெளிநாட்டு தொழிலாளர்கள் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதர் நிமல் பண்டா தெரிவித்தார.

இந்த குழுவின் அடுத்த அமர்வில் இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த கவலை இலங்கையர்களுக்கும் அப்பால் பிற வெளிநாட்டினரையும் பாதிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே விசா விடயத்துக்கும் மேலதிகமாக, இலங்கை நாடாளுமன்ற அதிகாரிகளுக்கு இஸ்ரேலில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் இஸ்ரேல்-இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவர் சேகா மெலாகு, இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் வெளியுறவுக் கொள்கைப் பிரிவின் பிரதிநிதிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்தின் துணை தலைவர் ஹேமந்த ஏகநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் கெரோயினுடன் ஒருவர் கைது




பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் கெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறை பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 8460 மில்லி கிராம் கெரோயின் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபரையும் சான்று பொருளையும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து, பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சுற்றிவளைப்பு காங்கேசன் துறை பிராந்தியத்திற்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகரின் வழிநடத்தலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் சீன உளவுக் கப்பல்

சீனாவினால் அதிகாரபூர்வமாக 'ஆராய்ச்சிக் கப்பல்' என்று அறிவிக்கப் படுகின்ற, ஆனால் ஒரு அதிநவீன உளவுத்துறை சேகரிப்பு தளமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்ட 'யுவான் வாங் 5' கப்பல், இந்தியப் பெருங்கடலுக்குள் சர்ச்சைக்குரிய முறையில் நுழைந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் திரும்பவும் சத்தம் சந்தடியின்றி இந்தியாவை நெருங்கி வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இது இந்தியாவின் பாதுகாப்புக் கட்டமைப்பில் புதிய கவலைகளைத் தூண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 36 மணி நேரத்திற்கு முன்பு இந்தோனேசியாவிலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் கடந்த சனிக்கிழமை இந்தியாவை நெருங்கி இருந்ததாக இந்திய மற்றும் வங்காளதேச கடற்படை வட்டாரங்கள் தானியங்கி அடையாள அமைப்பு மூலம் அவதானித்திருக்கின்றன. இந்தோனேசியாவிலிருந்து புறப்பட்டதிலிருந்து இந்தக் கப்பல் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அதன் சாத்தியமான பாதை வங்காள விரிகுடா நோக்கிச் செல்லும் என்று வங்காளதேச கடற்படை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்கா கப்பலின் நகர்வுகளை வெளிப்படையாகக் கண்காணித்து வந்தாலும், இந்திய அதிகாரிகள் வெளிப்படையாக அமைதி பேணுகின்றனர். ஆயினும், சமுத்திரத்தில் நகர்ந்தபடி, செய்மதிகள் மற்றும் விண்வெளிப் பிரதேசங்களை நுணுக்கமாக உளவு பார்க்கும் அதன் மேம்பட்ட விண்வெளி கண்காணிப்பு மற்றும் அவதானிப்புத் திறன்களைக் கருத்தில் கொண்டு, கப்பலின் நுழைவு 'மிகவும்தீவிரமாக' எடுத்துக்கொள்ளப் படுவதாக இந்திய தேசியப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளின் வட்டாரங்கள் ஒப்புக்கொள்கின்றன.

மூன்றுஆண்டுகளில் 'யுவான்வாங்5' இந்தியாவிற்கு அருகிலுள்ள கடல் பகுதியில் பயணிப்பது இது இரண்டாவது முறையாகும். ஓகஸ்ட் 2022 இல், புதுடில்லியின் கடுமையான ஆட்சேபனைகளை மீறி, அந்தக் கப்பல் இலங்கையில் சீனாவால் கட்டப்பட்ட ஹம்பாந்தோட்டா துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. அந்த நேரத்தில், பெய்ஜிங் இந்த நடவடிக்கையை சர்வதேச சட்டத்திற்கு இணங்க 'கடல் அறிவியல் ஆராய்ச்சி' என்று தெரிவித்தது. அது மட்டுமல்ல, சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின், கப்பலின் இயக்கங்களை "எந்த மூன்றாம் தரப்பினரும் தடுக்கக் கூடாது" என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

'யுவான் வாங் 5' சீனாவின் சமீபத்திய தலைமுறை விண்வெளி கண்காணிப்பு கப்பல்களில் ஒன்றாகும். இது செயற்கைக்கோள் ஏவுதல்கள், ராக்கெட்டுகள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை கண்காணிக்கப் பயன்படுகிறது. இந்தியப் பெருங்கடல் கடற்கரைக்கு மிக அருகில் அதன் இருப்பு, இப்பகுதியில் பெய்ஜிங்கின் விரிவடைந்து வரும் இராணுவத் தடத்தின் ஒரு பகுதியாக நீண்டகாலமாக பாதுகாப்பு ஆய்வாளர்களால் விவரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வங்காளதேசத்தின் சிட்டகாங் மற்றும் காக்ஸ் பஜாரில் சில தினங்களுக்கு முன்னர் பூர்த்தியான அமெரிக்க - வங்காளதேச கூட்டுப் பயிற்சியான 'பசிபிக் ஏஞ்சல்-2025' முடிவடையும் சமயத்தில் சீன உளவுக் கப்பலின் இந்தியப் பெருங்கடல் வருகை இந்தியாவில் மூலோபாய அணுகுமுறையில் சலனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

புதுடில்லியில் உள்ள ஆய்வாளர்கள், 'யுவான் வாங் 5' இன் மீள் வருகை செயற்கைக்கோள் கண்காணிப்பை நோக்கமாகக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், பிராந்திய இராணுவ நடவடிக்கைகள் குறித்த உளவுத் தகவல்களை பெய்ஜிங்கிற்கு வழங்கக் கூடும் என்று எச்சரிக்கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

# தினகரன் - அண்ணாமலை சந்திப்பு; ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை



அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி. தினகரனை, தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று முன்தினம் இரவு சந்தித்துள்ளார். ஒன்றரை மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின்போது இருவரும் பல்வேறு விஷயங்கள் குறித்து பேசினர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணியில் அ.ம.மு.க. இடம்பெற்று, தேனி மற்றும் திருச்சி தொகுதிகளில் போட்டியிட்டது. அந்த தேர்தலில் அ.தி.மு.க, தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து களமிறங்கியது. இந்தச் சூழலில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க. இணைந்தது.

2026 சட்டப்பேரவை தேர்தலுக்கான முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி என தீர்க்கமாக அறிவிக்கப்பட்டதால் அதிருப்தியடைந்த தினகரன், பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினார். அப்போது அண்ணாமலை தங்களை சரியாக நடத்தியதாக பாராட்டிய தினகரன், நயினார் நகேந்திரன் மீது குற்றச்சாட்டுகளையும் அடுக்கியிருந்தார்.

இந்தச் சூழலில், சென்னை அடையாறில் உள்ள அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரனின் இல்லத்தில், அவரை அண்ணாமலை நேற்று முன்தினம் இரவு சந்தித்தார். ஒன்றரை மணி நேரம் நடந்த இந்த சந்திப்பின்போது, தினகரனை மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வருமாறு அண்ணாமலை அழைப்பு விடுத்தார் என தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகிய முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு இந்த சந்திப்பின்போது தினகரனிடம் அண்ணாமலை வலியுறுத்தினார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அண்ணாமலை இந்த விடயமாக தினகரனை சந்தித்தாரா அல்லது வேறு ஏதேனும் அரசியல் நகர்வுகள் இதன் பின்னால் உள்ளதா என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது.

# விஜய் பிரச்சாரத்துக்கு கடுமையான நிபந்தனைகள் த.வெ.கவுக்கு ஆதரவாக உயர் நீதிமன்றத்தில் மனு



விஜய் பிரச்சாரத்துக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாகக் கூறி, த.வெ.க. தாக்கல் செய்த வழக்கிற்கு ஆதரவாக, தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் த.வெ.க. தலைவர் விஜய் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்த பிரச்சார சுற்றுப் பயணங்களுக்கு பொலிஸார் கடுமையான நிபந்தனைகள் விதித்துள்ளனர் என த.வெ.க. சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், பிரச்சாரத்துக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களை எந்த பாரபட்சமும் இன்றி பரிசீலித்து, அனுமதி வழங்கக் கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கு, நாளை மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் தங்களையும் இணைக்கக் கோரி தேசிய மக்கள் சக்தி கட்சி தலைவர் எம்.எல்.ரவி தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், தமிழக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளின் குரலை நெரித்து, ஜனநாயகத்தை ஒடுக்க முயற்சிக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவுக்கு இவ்வளவு கடுமையான நிபந்தனைகளை விதிக்காத அரசு, விஜய்க்கு விதிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக பொலிஸார், ஆளுங்கட்சியான தி.மு.கவின் ஒரு அணியாக செயல்படுகின்றனர் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸின் மனுவை நிராகரித்த உயர் நீதிமன்றம்

200 கோடி ரூபா பணமோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சுகேஷ் சந்திரசேகர் வழக்கில், பொலிவூட் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸின் மனுவை இந்திய உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஜாக்குலின் பெர்னாண்டஸ் இந்த வழக்கிலிருந்து தன்னை நீக்க வேண்டும் என்று மனுவில் கோரியிருந்தார்.

இது போன்ற நிவாரணம் பெற இது சரியான நேரம் அல்ல என்று கூறி அவரது வழக்கில் தலையிட இந்திய உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

ஜாக்குலின் பெர்னாண்டஸ் மீது மிரட்டி பணம் பறித்ததற்கான முக்கிய குற்றச்சாட்டு எதுவும் இல்லை என்றும், அவர் பணமோசடி செய்ததாக எந்த குற்றச்சாட்டும் இல்லை என்றும் ஜாக்குலின் பெர்னாண்டஸின் சட்டத்தரணி வாதிட்டார்.

இருப்பினும் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில், அவருக்கு எதிரான விசாரணை தொடரும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக இந்த வழக்கு தொடர்பில் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் தாக்கல் செய்த மனுவை டில்லி மேல் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீன நாடு என்ற ஒன்றே இருக்காது; இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை



பிரித்தானியா கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதாக வெளியிட்டுள்ள அறிவிப்பை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

இந்த நடவடிக்கை பிராந்தியத்தை மேலும் சீர்குலைத்து அமைதியான தீர்வுக்கான வாய்ப்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வாரம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு முன்னதாக, பாலஸ்தீன அரசை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதாக பல நாடுகள் அறிவித்துள்ளன.

இந்த நிலையில் பாலஸ்தீன நாடு என்ற ஒன்று இருக்காது என இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார்.

தங்களுடைய நிலத்தின் மையப்பகுதியில் ஒரு பயங்கரவாத அரசை தங்கள் மீது திணிக்கும் முயற்சிகளுக்குதான் அமெரிக்காவிலிருந்து இஸ்ரேலுக்குத் திரும்பிய பிறகு பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன், ஜோர்டான் நதியின் மேற்கில் எந்தப் பாலஸ்தீன அரசும் நிறுவப்படாது என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.





# ட்ரம்பின் எச்சரிக்கையை நிராகரித்த தலிபான் அரசு

ஆப்கானிஸ்தானில் உள்ள பஹ்ராம் விமானத் தளத்தின் ஒரு அங்குலத்தையேனும் தர முடியாது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு தலிபான்கள் பதிலளித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு, தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதுடன், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறின.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் உள்ள பஹ்ராம் விமானத் தளத்தில் மீண்டும் அமெரிக்கப் படைகளை நிலைநிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

இதனால், பஹ்ராம் விமானத் தளத்தின் கட்டுப்பாட்டை அமெரிக்காவிடம் ஆப்கானிஸ்தான் விரைவில் மீள வழங்க வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

இந்த நிலையில், ட்ரம்பின் எச்சரிக்கையை, தலிபான் அரசு நிராகரித்துள்ளது.

அதற்கமைய, எந்த ஒரு ஒப்பந்தத்தின் மூலமும், ஆப்கானிஸ்தானின் நிலத்தில் ஒரு அங்குலம் கூட வழங்க முடியாது என, ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் தலைமை அதிகாரி அறிவித்துள்ளார்.



# இஸ்ரேலிய படையினரின் தாக்குதல்; காசாவில் குடும்பங்களாக பலர் பலி

இஸ்ரேலிய படையினரால், காசாவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதலில், நேற்று 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என மருத்துவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பாலஸ்தீனத்தை ஒரு தனி அரசாக அங்கீகரிப்பதற்கான அண்மைக்கால இராஜதந்திர நடவடிக்கைகள், முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், காசாவில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையைத் தடுப்பதற்கு எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், காசா நகரிலுள்ள பெரும்பாலான குடியிருப்புகள் தகர்க்கப்பட்டுள்ளன எனவும் நகரத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கில் இஸ்ரேலிய இராணுவம் தரை மார்க்கமாக நகர்வதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன், ஹமாசினால் பயன்படுத்தப்பட்ட கட்டடங்களை இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்தும் அழித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில், கட்டடங்கள் முற்றாகத் தரைமட்டமாக்கப்படுவதனால், குடும்பங்களாகப் பலர் கொல்லப்படுகின்றனர் எனவும் இடிபாடுகளில் பலரின் உடல்கள் சிக்கியுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, காசா நகரத்தை விட்டு லட்சக்கணக்கான பலஸ்தீனியர்கள் தெற்கு நோக்கித் தப்பிச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# நாகர்கோவில் மாணவர்கள் படுகொலையின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு

நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் இலங்கை விமனாப்படை மேற்கொண்ட விமானத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 மாணவச் செல்வங்களின் 30 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக் கப்பட்டது.



நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் அமைந் துள்ள நினைவாலயத்தில் நினைவுச் சுடர் ஏற்றப் பட்டு உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத் தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவுகள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.












# பருத்தித்துறை நவீன சந்தை தொகுதியில் நடைபாதையை ஆக்கிரமித்து வியாபாரம்

பருத்தித்துறை நகரசபைக்கு சொந்தமான நவீன சந்தை கட்டடத் தொகுதியில் நடைபாதையினை ஆக்கிரமித்து இடம்பெற்று வரும் வியாபார நடவடிக்கையினை நிறுத்துவதற்கு பருத்தித்துறை நகர பிதா வி. டக்ளஸ் போல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக நடைபாதை ஆக்கிரமிப்பு விடயம் தீர்க்கப்படாது இருந்து வரும் நிலையில், நேற்று நவீன கட்டடத் தொகுதிக்கு விஜயம் மேற்கொண்டு வர்த்தக சங்க பிரதிநிதிகளுடைய பங்கேற்பில் வியாபாரிகளுடன் கலந்துரையாடி ஒத்துழைப்பு வழங்குமாறு நகரபிதாவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது நகரசபை செயலாளர் மற்றும் நகரசபையை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி சட்டரீதியாக வழங்கப்பட்ட இடத்திற்குள் வியாபார நடவடிக்கையினை முன்னெடுத்து ஒத்துழைப்பினை வழங்குமாறு நகர பிதாவினால் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# ஜே.வி.பி. அரங்கேற்றிய மனிதக் கொலைகளை காலம் வரும்போது வெளிப்படுத்தியே தீருவோம்

## முன்னாள் அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



"நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகளில் கொள்ளையடித்து, மின் பிறப்பாக்கிகளுக்குத் தீ வைத்து, பாடசாலைகளை உடைத்து, நெல் களஞ்சியசாலைகளைத் தீக்கிரையாக்கி 1980 களில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) செய்த மனிதப் படுகொலைகளைப் பட்டியலிட்டால் அவற்றை வெளிப் படுத்தக் காலம் போதாது. ஆனால் காலம் வரும் போது நிச்சயம் அவை தொடர்பில் வெளிப்படுத்துவோம். இந்த வன்முறையாளர்களிடம் இருந்து மக்கள் எதிர்பார்க்கும் எந்தவொரு மாற்றமும் இடம்பெறாது."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"எதிர்க்கட்சியில் இருந்து கூறும் விடயங்களை ஆட்சியமைத்த பின்னர் நிறைவேற்ற முடியாது என அமைச்சர் லால் காந்த குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறுபவர்கள் அடுத்தடுத்த தேர்தல்களின் போது எவ்வாறு மக்களிடம் சென்று வாக்குக் கேட்க முடியும்? இவர்கள் நாட்டைத் தூண்டிவிட்டு, சீரழித்து, அரசியலையும் தவிடுபொடியாக்கி மக்களை முடிந்தவரை ஏமாற்றியிருக்கின்றனர்.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானாலும், ஐக்கிய தேசியக் கட்சியானாலும் எதிர்க்கட்சியாக இருக்கும் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆட்சியமைத்த பின்னர் நிறைவேற்றியிருக்கின்றோம். ஜே.வி.பியைப் போன்று மக்களை ஏமாற்றவில்லை. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக் களை வழங்கியது முதல் நாம் நிறைவேற்றிய வாக்குறுதிகள் நீண்ட பட்டியலாகும்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, கடும் எதிர்ப்பை வெளியிட்டு அதனை இடைநிறுத்தியது ஜே.வி.பியாகும். தற்போது மீண்டும் அந்த வேலைத்திட்டத்துக்கு இவர்களாலேயே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இதனால் தற்போது எமக்கு 500 பில்லியன் ரூபா நட்டமாகும். நாம் ஆட்சியமைத்திருந்த கால கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட அனைத்து வேலைத்திட்டங்களிலும் நட்டம் ஏற்பட்டதற்கான பிரதான காரணம் ஜே.வி.பி. மாத்திரமே.

1980 களில் நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகளில் கொள்ளையடித்து, மின் பிறப்பாக்கிகளுக்குத் தீ வைத்து, பாடசாலைகளை உடைத்து, நெல் களஞ்சியசாலைகளைத் தீக்கிரையாக்கி ஜே.வி.பி. செய்த மனிதப் படுகொலைகளைப் பட்டியலிட்டால் அவற்றை வெளிப்படுத்த காலம் போதாது. ஆனால் காலம் வரும் போது நாம் அதனைச் செய்வோம். அந்த வரலாற்றை மக்களுக்கு நினைவுபடுத்துகின்றோம். இந்த குழுவினரிடமே மக்கள் மாற்றத்தைக் கோரினர். ஆனால், அந்த மாற்றம் ஒருபோதும் சாத்தியப்படாது." – என்றார்.

# குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கால்வாயிலிருந்து நேற்று மீட்பு!



குடும்பஸ்தர் ஒருவர் கால்வாயில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாத்தறை – காலி வீதியில் உள்ள கால்வாயில் இருந்து நேற்று திங்கட்கிழமை அக்குரெஸ்ஸ,பரதுவ திப்பலைவத்த பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் உள்ள மரமொன்றில் இருந்து குடை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்குரெஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பார்த்தீபன் இன்னும் பசியோடுதான் இருக்கின்றான்!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.**

தியாக திருவுருவமே
ஒளி தரும் நிலவே
தமிழ் இனத்தின் விடியவே!

உயிரிலும் மேலாக தாயக விடுதலைக்காக
தீராத வேட்கை கொண்டவனே
தமிழின விடுதலைக்காக
ஆகுதியானவனே!

பார்த்தீபனுக்கு இது தேவையா?
சின்ன வயதிலே
துள்ளித் திரிந்து
குதுகலித்திருக்க வேண்டியவன்!

சாவைத் துச்சமென மதிக்கும்
வீரப் புலிப் பண்புகளை
உலகுக்குப் பறை சாற்றியவன்!


மரணத்தைத் தாய் மண்ணுக்காய்
அருகினில் அழைத்தாயே!
அகிம்சையின் பொய் முகம் உடைத்தாயே!

அகிம்சையின் பிறப்பிடத்துக்கே
அகிம்சையால் பாடம் புகட்டியவன்
சாத்வீகப் போராட்டமும் தோற்றதுவே!

அடக்குமுறையை உடைத்தெறிய
மக்கள் புரட்சிக்கு வித்திட்டவனே!
ஐந்தம்சக் கோரிக்கையை முன்னிறுத்தி
மக்களுகளுக்காய் இலட்சிய
வெறியுடன் அணுவணுவாய் மாய்ந்தவனே!

தற்குறித்தனங்களின் விளைவுகளால்
ஆகுதியான தியாகச் செம்மல்!
ஓ சிங்களப் பேரினவாதமே
உன்னை மன்னிக்கலாம் நீ எதிரி
ஆனால் எமது இனத்துக்கான
துரோகிகளை எப்படி மன்னிப்பது!

நீ இன்னும் இறக்கவில்லை
மூச்சிழுக்கும் நேரமெல்லாம் உன் ஞாபகம்
ஆனால் நீ இன்னும் பசியோடுதான் இருக்கிறாய்
என்பது மட்டும் உண்மையிலும் உண்மை!



- ஜோசப் ஜெயகெனடி -




# எந்தவொரு சூழ்நிலையிலும் மின்சாரத் துறையை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க மாட்டோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

இந்நாட்டின் வலுசக்தி இறையாண்மையை அரசாங்கம் எப்போதும் பாதுகாத்து வருவதாகவும், எந்தவொரு சூழ்நிலையிலும் மின்சாரத் துறையை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இல்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமைக்காக  வலுசக்தி இறையாண்மையை உறுதி செய்வது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும், மின்சாரத் துறையின் நிறுவனக் கட்டமைப்பில் உள்ள குழப்ப நிலையைத் தீர்த்து, முறையான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதே அரசாங்கத்தின் தேவை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மின்சாரத் துறையில் புதிய மறுசீரமைப்புகள் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மின்சாரத் துறையில் புதிய மறுசீரமைப்புகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை மின் உற்பத்தி நிறுவனம், தேசிய பரிமாற்ற வலையமைப்பு விநியோக நிறுவனம், இலங்கை மின்சார விநியோக நிறுவனம் மற்றும் தேசிய கட்டமைப்பு இயக்க நிறுவனம் உட்பட புதிதாக நிறுவப்பட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

மின்சாரத் துறையின் செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் புதிய மாற்றத்திற்கு ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பு அவசியம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக பழைய கட்டமைப்பு இனிமேலும் போதுமானதாக இல்லை என்றும், புதிய கட்டமைப்பின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதன்போது, தற்போது வகிக்கும் பதவிகள் அல்லது சம்பள அளவுகள் எந்த வகையிலும் குறைக்கப்படாமலும், பதவி உயர்வுக்கு செல்வதற்கு நிலவிய தடைகளை நீக்கும் வகையில் செயற்படல், அனைத்து ஊழியர் உரிமைகளையும் பாதுகாத்தல், புதிய நிறுவன கட்டமைப்பில் இலங்கை மின்சார சபையாக இருந்த அனைத்து உரிமைகளையும் உறுதி செய்தல், புதிய நிறுவன கட்டமைப்பில் உள்வாங்கப்படும் போது இலங்கை மின்சார சபையாக  தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளைத் தீர்த்தல், வலுசக்தி இறையாண்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதை முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றுவது ஆகிய கோட்பாடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிறுவனங்கள் அதன் ஊழியர்களுக்காக அன்றி, நாட்டிற்காகவும் பொதுமக்களுக்காகவும் உள்ளன என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மிகவும் செயற்திறனுடம், தொடர்ச்சியாகவும், நியாயமான விலையிலும் நுகர்வோரின் மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்தால், அது அரசாங்கத்திற்கும் ஊழியர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் எப்போதும் தயாராக இருப்பதாகவும், இலங்கை மின்சார சபையில் நடப்பது நீண்டகால நிறுவன கட்டமைப்பை புதிய நிறுவன கட்டமைப்பாக மாற்றுவது மாத்திரமே என்றும், இது விற்பனையோ, அரச உரிமையை கைவிடுவதோ அல்லது வலுசக்தி இறையாண்மையை கைவிடுவதோ அல்ல என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதுவே உலகின் அபிவிருத்திக்கான பாதை என்றும் தெரிவித்தார்.

புதிய மறுசீரமைப்பு செயற்பாடுகளில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இந்த முயற்சிகளில் வழங்கும் பங்களிப்புக்காக  குழு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால மற்றும் மின்சார சபையின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.








# ‘சண்முககதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்’ யாழில் நடைபெற்ற நூலின் அறிமுக நிகழ்வு





மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடான “சண்முககதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்“ நூல் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் கந்தர்மடம் “எங்கட புத்தகங்கள் இல்லத்தில்“ நடைபெற்றபோது கம்யூனிஸ்ட் இயக்க செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான வி.ரி.இளங்கேவன் நூல் அறிமுகவுரையையும், சட்டத்தரணி சோமசுந்தரம் தேவராஜா தலைமையுரையையும் நிகழ்த்துகின்றமையையுன், காலஞ்சென்ற முற்போக்கு எழுத்தாளர் கே.டானியலின் மகன் சாம் வசந்தன் நூலின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்கின்றமையையும் காணலாம்.







# மன்னாரில் தீப்பந்த போராட்டம் முன்னெடுப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன் னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 50 ஆவது நாளை எட்டிய நிலையில் அன் றிரவு அங்கு தீப்பந்தப் போராட்டம் ஒன்றய் முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட் டில், இளைஞர் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து போராட்டங்களை முன்னெ டுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு மக்கள் கையில் தீ பந்தத்தை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் தீப்பந்தப் போராட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், இளையோர், பொது மக்கள் என நூற் றுக்கணக்கானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





















# வீதியின் மத்தியில் ஓட்டை வடிகான் ஆபத்தானநிலையில் வடிவேல் வீதி!

## கவனிப்பார் இல்லை; காரைதீவு மக்கள் விசனம்!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு 12ஆம் பிரிவில் உள்ள வடிவேல் வீதி, மத்தியில் பாரிய ஓட்டையுடன் கூடிய வழிகான்களுடன் அபாய நிலையில் உள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் நிருவாகத்தின் கீழ் உள்ள இவ் வீதி பல காலமாக கவனிப்பாரற்றுக் காணப்படுகிறது.

அந்த வீதியில் பயணிக்கும் பயணிகள் வாகனங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டி இருக்கின்றன. இதுவரை ஏகப்பட்ட விபத்துகள் அங்கு சம்பவித்திருக்கின்றன.

வீதியின் மத்தியில் வடிகான்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றது. அவ் வடிகானின் மூடிகள் பல இடத்தில் உடைந்து பாரிய ஓட்டைகளுடன் காணப்படுகின்றன. அந்த இடத்தில் வாகனங்களில் சில்லுகள் சிக்குகின்ற பொழுது ஆபத்து எதிர் நோக்கப்படுகின்றது .

சில இடங்களில் வீதி தாழ் இறங்கி உள்ளது.

இவ்விதம் சுமார் 100 மீட்டர் தூரம் பாரிய ஆபத்தோடு காணப்படுகின்ற இந்த வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவந்த பொழுதும் யாருமே அதனை கவனிக்கவில்லை. மக்களின் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காக மாறியுள்ளது.

இந்த அரசாங்கத்திலாவது இதனை சீர் செய்து தர வேண்டும் என்று அப்பகுதி வாழ் மக்கள் குடியிருப்பாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள் .

இதேவேளை, வடிவேல் வீதியின் மத்திய பகுதியில் ஒழுங்கான வடிகானின்மையால் மழை காலங்களில் அருகில் உள்ள குடிமனைகள் வெள்ளத்தில் மூழ்கி சேதமாகி வருகின்றன.

வெள்ளம் வரும் பொழுது மட்டும் அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர், அரசியல் வாதிகள் உள்ளிட்ட பலரும் வந்து பார்த்துச் செல்வார்கள் .

ஆனால் வெள்ளம் வடிந்த பின்பு யாரும் இதனைக் கவனிப்பதில்லை என அப்பகுதி மக்கள் விரக்தியுடன் தெரிவிக்கின்றனர்.

அருகிலுள்ள ஊர்களில் கொங்கிறீற் வீதிகளுக்கு மேல் கார்பட் அல்லது கொங்கிறீட் போடுகிறார்கள். ஆனால் காரைதீவில் பல வீதிகள் இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

இந்த வடிவேல் வீதியால் தொடர்ச்சியாக பல வருட காலமாக மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டே வருகின்றார்கள் .

எனவே இதனை இந்த மாரிக்கு முன்பதாக வடிகான்களை அமைத்துத் திருத்தித் தருமாறு வடிவேல் வீதியின் மத்தியிலே வாழுகின்ற குடியிருப்பு மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.








# முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் நியமனத்தை எதிர்த்துப் போராட்டம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயத்தில் இருந்து முறைகேடான வகையில் இடமாற்றங்கள் மேற்கொண்டமை, ஆசிரியர் ஒருவரை அதிபராக நியமிக்க எடுக்கப்பட்ட முடிவு போன்றவற்றுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயத்தில் இருந்து முறைகேடான வகையில் ஆசிரியர்களை இடமாற்றங்கள் மேற்கொண்டமை, அதிபரை ஒரு மாத காலமாக நியமித்து தராமல் இழுத்தடிப்பு செய்து அதிபர் நேர்முக பரீட்சையில் எடுக்கப்பட்ட முடிவுக்கு மாறாக ஆசிரியர் ஒருவரை அதிபராக நியமிக்க எடுக்கப்பட்ட முடிவு ஆகியவற்றை எதிர்த்து குமுழமுனை மகாவித்தியாலத்திற்கு முன்பாக இந்த எதிர்ப்பு போராட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

போராட்டம் தொடர்பான மகஜர் ஆளுநர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு அரசாங்க அதிபர், வலய கல்வி பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. ஆளுநருக்குரிய மகஜரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கான மகஜரும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் போராட்ட இடத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டிருந்தன.

பாடசாலைக்கு வருகை தந்திருந்த முல்லை கோட்டக்கல்வி பணிப்பாளர் திருக்குமரனிடம் இந்த விடயம் தொடர்பில் வினவிய போது தாம் ஊடகங்களுக்கு கருத்து கூற முடியாதெனவும் வலயக் கல்வி பணிப்பாளரே கருத்து கூற முடியும் எனவுன் தெரிவித்திருந்தார்.

இந்தப் போராட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான வீ.கலைச் செல்வன், ஜெ.சிவசாந்தி , பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.













# போதைப் பொருள் வியாபாரி உட்பட நால்வர் வளத்தாப்பிட்டியில் கைது!

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம், புதிய கிராமம் பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்கள் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை வேளையில் சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினரினால் சுற்றிவளைத்துக் கைது செய்யப்பட்டனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, நீண்ட காலமாக இளைஞர்களை இலக்கு வைத்து சூட்சுமமான முறையில் வியாபாரம் செய்துவந்தவரை கைது செய்துள்ளனர்.

வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் பகுதியைச் சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரும், கல்லரிச்சல் 04 பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும், வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் புதிய கிராமம் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரும், சம்மாந்துறை 03 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் என நால்வர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 2321 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும், 380 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், ஒரு தொகை பணம், 4 கையடக்கத் தொலைபேசிகள், 3 “பவர் பாங்“கள், 3 வங்கி அட்டைகள் என்பன மீட்கப்பட்டன. சந்தேக நபர்கள் சான்றுப்பொருள்களுடன் சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூவர் ஏற்கனவே நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கைது செய்யப்படாமல் தலைமறைவாகி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கைது நடவடிக்கை, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப்குமாரவின் வழிகாட்டுதலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தலைமையிலான குழுவினரினால் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸின் பின்புறத்தில் மோ.சைக்கிள் மோதியதில் 3 பேர் காயம்!





(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரில் நேற்று முன்தினம் மாலை நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸின் பின்புறத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் பலத்த காயங்களுடன் மிகவும் ஆபத்தான நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

நுவரெலியாப் பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் அதிக வேகத்தால் கட்டுப்பாட்டை இழந்து தலவாக்கலை மக்கள் வங்கிக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸின் மீது மோதி இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

வீதியில் நடந்து சென்ற ஒருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பேரும் விபத்தில் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்த தலவாக்கலை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நவராத்ரி கொலு வைத்தல் ஆரம்பம்






கொலு – அழகு வீற்றிருப்பது என்று பொருள். கொலு என்பது நவராத்திரியை முன்னிட்டு பொம்மைகளை வைத்து செய்யப்படும் ஒரு வழிபாட்டு முறை யாகும். இந்து சமயத்தில் சக்தியின் வழிபாடாகக் கருதப்படுகிறது.

நேற்று நவராத்ரி ஆரம்பமானதை முன்னிட்டு தமிழ் மாதமான புரட்டாசியில் வரும் மகாளய அமாவாசையை அடுத்து வரும் பிரதமை திதியிலிருந்து பத்து நாள்கள்

சகல இல்லங்களிலும் ஆலயங்களி லும் கொலு வழிபாடு ஆரம்பமானது. படத்தில் இல்லத்தில் கொலு வழிபாடு ஆரம்பமானதை காட்டுகிறது.




# ஜனாதிபதியின் ஆரோக்கியத்துக்கு சாய்ந்தமருதில் துஆப் பிரார்த்தனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து நேற்றுடன் ஒரு வருட பூர்த்தியை முன் னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட துஆப் பிரார்த் தனை நேற்று திங்கட்கிழமை சாய்ந்த மருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் ஜம்இய்யத்துல் உலமா வின் சாய்ந்தமருது – மாளிகைக்காடு கிளையின் தலைவரும், சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளி வாசலின் உதவித் தலைவருமான எம். எம்.எம். சலீம் (ஷர்க்கி) தலைமையில் இடம்பெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப் பட்டதோடு, அதிகளவான ஜமாஅத்தார்க ளும் துஆப் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

இதன் போது நாட்டின் சுபீட்சத்துக் காகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவின் ஆரோக்கியம் மற்றும் அவரது அயராத சேவையுடன் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி மற்றும் நியாயமான ஆட்சிக்காகவும் ஜனாதிபதி நீண்ட காலம் ஆரோக்கியத்தோடு நாட்டைக் கொண்டு செல்லவும் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# முன்னேஸ்வரத்தில் வசந்த நவராத்திரி

(உடப்பு க.மகாதேவன்)

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதாரம்பம் நேற்று திங்கட்கிழமை துர்க்கைக்குரிய பூஜை யுடன் ஆரம்பமானது.

நாடளாவிய ரீதியில் நடைபெறும் இந்த விரதமானது, சிலாபம் முன்னேஸ் வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னை நாதஸ்வாமி ஆலயத்தில் வசந்த நவராத்திரி என்ற பெயரில் ஆரம்பமானது.

இதில் முதல் மூன்று தினங்களும் துர்க்கைக்காகவும் மற்றும் அடுத்த மூன்று தினங்களும் லட்சுமிக்காகவும், இறுதி மூன்று தினங்களும் சரஸ்வதிக்காகவும் கொண்டாடப்படுவது வழக்கமாகும்.
















# குருதி தோய்ந்த செம்மணியும் தமிழ் தேசிய இனத்தின் ஏக்கமும்..!



அருணாசலம் சபேஷ்குமார்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. தென்னிலங்கையில் ஊழல் மோசடி வழக்குகள், போதைப் பொருள் மாபியாக் களின் கைதுகள் என்பன பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக் கடியை ஏற்படுத்தியுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. பிரிட்டன் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணையை வலியுறுத்தியுள்ளது. வடக்கில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்களும், செம்மணிக்கான நீதிக் கோரிக்கைகளும் வலுப்பெற்று வருகின்றன. இந்த நிலையில் ஐ.நாவில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்காவின் உரையும் இடம்பெற வுள்ளது. அவரது உரையில் தமிழ் மக்களது எதிர்பார்ப்பு குறித்து ஐ.நாவில் என்ன கூறப்போகின்றார் என்ற கேள்வி தமிழ் தேசிய இனத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரமும் சூடு பிடித்துள்ளது. யுத்த காலத்தில் யாழ் குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த போது கைது செய்யப்பட்ட மற்றும் கட்டத்தப்பட்டு காணாமல் போனவர்களே கொல்லப்பட்டு செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளனர் என்ச்க் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும், தமிழ் அரசியல் கட்சிகளும் குற்றம் சாட்டியுள்ளன.

மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை கைதியாகவுள்ள இராணுவச் சிப்பாய் சோமரத்தின ராஜபக்ஷ செம் மணியில் 300 முதக் 400 பேர் வரைக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர் என முன்னர் தெரிவித்து இருந்த மையுடன், செம்மணி புதைகுழி குறித்து சாட்சியமளிக்கத் தான் தயார் எனத் தனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு கடிதம் மூலமும் தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்கள் அங்கு இடம்பெற்ற கொலைகளுக்கான சாட்சியங்களா கவுள்ளன. அவரது சாட்சியங்களின் அடிப்படையில் அதனுடன் தொடர்புடையவர்கள், அவர்களுக்கு கட்டளை பிறப்பித்தவர்கள் எனப் பலரை இனங்காணக் கூடியதாக இருக்கும். இலங்கை அரச படைகளின் வன்மத்தையும், அவர்களது கொடூர வெறியாட்டத்தையும் அதன் மூலம் வெளிப்படுத்த முடியும்.

ஆனால், தென்னிலங்கையில் உள்ள கடும்போக்கு வாத பௌத்த மேலாதிக்கத்தை எதிர்த்து இந்த அரசாங் கம் செம்மணி விவகாரத்தை நீதியாகவும், நேர்மை யாகவும் விசாரித்து படைத் தரப்புக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்குமா..? என்ற கேள்வி பாதிக்கப்பட்ட மக்களிடம் எழுந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதற்கு முள்ளிவாய்கால் மண் மட்டுமன்றி, செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியும் சாட்சியாகக் கண் முன்னே வந்து நிற்கின்றது. அங்கு மீட்கப்பட்ட சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலான 239 எலும்புக் கூடு களும், அவற்றை ஆடைகளற்று புதைக்கப்பட்டிருந்த நிலைகளும், 72 சான்றுப் பொருள் களும் அங்கு நடந்த கொடூரத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகவுள்ளன. இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவும் இந்த விடயத்தில் கரிசனை செலுத் தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் செம்மணி விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால் நீதிமன்றம் தனது கடமையை செய்யும் எனவும் அதில் அரசாங்கம் தலையீடாது, தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கும் எனவும் கூறியுள்ளது. இரண்டு கட்ட அகழ்வு பணிகள் இடம்பெற்று மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இனி இடம்பெற வேண்டும். அதற்கு தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை அரசாங்கமே செய்து கொடுக்க வேண்டும். அதனைச் செய்து நீதியான முறையில் செம்மணி விசாரணை இடம்பெற அரசாங்கம் வழிவிடுமா? கடந்த காலங்களைப் போல் அல்லாது பொலிஸ் மற்றும் நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதாக கூறிக் கொள்ளும் அரசாங்கம் செம்மணி விடய்திலும் நீதியாக நடந்து கொள்ள வேண்டும்.

மனித புதைகுழிகள் உட்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளின் போது, ஐக்கிய நாடுகளின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ள தயாராகவே இருப்பதாக இலங்கை அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுக ளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மூலம் இந்த தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ள இலங்கை தயாராகவே உள்ளதாக வெளியுறவு அமைச்சர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார். இந்த கருத்தானது ஐ.நாவை சமாளிப்பதற்கான கண் துடைப்பாக இல் லாமல், உண்மையான கருத்தாக இருக்க வேண்டும். சர்வதே சமூகமும் பாதிக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் அபிலாசைகளை புரிந்து கொண்டு இலங்கை அரசாங் கத்திற்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும்.

செம்மணி என்பது குருதி தோய்ந்த மண். அங்கு மரணித்தவர்களை மீள கொண்டு வர முடியாது. ஆனா லும் அந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் தண்டிக் கப்படுவதன் மூலமே மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, குறைந்தபட்சம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பரிகார நீதியை பெற்றுக் கொடுக்க முடியும். அது அந்த மக்க ளுக்கு ஒரு ஆறுதலாக அமையும். இந்த நாட்டின் நீதித் துறையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி தமிழ் தேசிய இனமும் இலங்கையர்களாக ஒரு மித்துப் பயணிக்க அது வழிவகுக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 23.09.2025




இன்று உங்கள் விருப்பத்துக்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணபப்டுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள்சகபணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மனநிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருபதால் நீங்கள் முறையாக திட்டமிட இயலாது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர்பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கடன் வாங்குவதற்கான சாத்தியம் உள்ளது.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதட்டம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள்- 23.09.2025




நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக்குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.





இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

# வவுனியாவில் ரூ.12 லட்சம் பெறுமதியான ஆறு கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது!






(கி.வசந்தன்)

12 லட்சம் ரூபா பெறுமதியான 6 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீத் சுரங்க வீரத்தின் வழிகாட்டலில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷவின் தலைமையில் பொலிஸ் சார்ஜண்டுகளான திஸாநாயக்கா (37348), திலீப் (61461), ரங்வல்ல (61518), உடுவெல்ல (73451) மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி (60945), ரணில் (81010), தயான் (91792), சுபுன் (28752), சரீத் (80589) ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ்குழுவினர் வவுனியா நகரப்பகுதியில் திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டர் சைக்கிளில் கஞ்சா கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மோட்டர் சைக்கிளும் உடமையில் இருந்த 6 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன. மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 12 லட்சம் ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வவுனியா மருக்காரம்பளை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அவர் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.